36. சுனாமி என்ற வார்த்தை எந்த மொழியில் இருந்து பெறப்பட்டது?

1. ஜப்பானிஷ் 2. ஸ்பானிஷ் 3. கிரேக்கம் 4. இலத்தீன்

37. ஹிரோஷிமா மீது வீசப்பட்ட அணுகுண்டை விட செர்னோபில் அணு உலை விபத்தில் _______ மடங்கு அதிகமான கதிர்வீச்சு வெளிப்பட்டது.

1. 300 2. 400 3. 500 4. 600

38. ஹிரோஷிமா மீது எந்த ஆண்டு அணுகுண்டு வீசப்பட்டது?

1. 1954 2. 1945 3. 1937 4. 1939

39. தவறான இணையைக் கண்டறிக

1. நைட்ரஜன் - 78.09 %
2. ஆக்சிஜன் - 20.95 %
3. கார்பன் டை ஆக்சைடு - 0.03 %
4. நியான் - 1 %

40. கடந்த 20 ஆண்டுகளில் உலகில் சுமார் _______ இலட்சத்திற்கும் மேலான மக்கள் மோசமான வானிலை நிகழ்வுகளால் இறந்துள்ளனர்.

1. 4 2. 5 3. 6 4. 3

41. பருவமழை பொய்ப்பின் காரணமாக _______ ஏற்படுகிறது.

1. ஆவி சுருங்குதல் 2. வறட்சி
3 ஆவியாதல் 4. மழைப்பொழிவு

42. இடர்கள் உருவாகும் அடிப்படையில் இடர்களை _______ வகைகளாகப் பிரிக்கலாம்.

1. 3 2. 6 3. 7 4. 8

LIVEWORKSHEETS

43. நைட்ரஜன் ஆக்சைடுகள் மனிதர்களைப் பாதிக்கும் ______ நிலை மாசுபடுத்திகளாகும்.

1. முதன்மை 2. இரண்டாம் 3. மூன்றாம் 4. நான்காம்

44. தவறான இணையைக் காண்க :

1. முதல்நிலை மாசுபடுத்திகள் - சல்பர் ஆக்சைடுகள்
2. அபாயகரக் கழிவுகள் - காலாவதியான மருந்துகள்
3. நில அதிர்வு - சுனாமி
4. வானிலையியல் வறட்சி - தீவிரவாதம்

45. கீழ்க்கண்டவற்றுள் தவறான கூற்று எது?

1. வெப்ப மண்டல சூறாவளிகள் காரணமாக திடீரென்று ஏற்படும் புயல் அலை ஆழமான கடலோரப் பகுதிகளில் காணப்படுகிறது.
2. சதுப்பு நிலக் காடுகள் அழிக்கப்படுவதால், சூறாவளி அலைகள் கடற்கரைப் பகுதிகளில் இடரை ஏற்படுத்துகின்றன.
3. நிலச் சரிவு ஏற்பட செங்குத்துச் சரிவு மற்றும் கன மழை ஆகியன முக்கியக் காரணங்களாகும்.
4. சூறாவளி புயல் காற்று, வட அரைக் கோளத்தில் கடிகார எதிர் திசையில் சுழல்கிறது.

46. ஹாசர்ட் என்பதன் பொருள் ______.

1. கபடி விளையாட்டு 2. கோகோ விளையாட்டு
3. பகடை விளையாட்டு 4. சதுரங்க விளையாட்டு

47. பெரும் சுற்றுச்சூழல் பேரழிவு காரணமாக இந்தியாவில் 2017 ம் ஆண்டு வரையிலான 10 ஆண்டுகளில் சுமார் எத்தனை பேர் இறந்துள்ளனர்?

1. 22000 2. 23000 3. 20000 4. 25000

48. சுனாமி என்ற சொல்லுக்கு ______ என்று பொருள்.

1. கடல் அலை 2. கடற்கரையோரம்

LIVEWORKSHEETS

3. துறைமுக அலை 4. எதுவுமில்லை

49. கீழ்க்காண்பவைகளுள் சரியானது எது?

கூற்று 1: பேரிடர் என்பது வரையறுக்கப்பட்ட பகுதியில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் நிகழும் ஒரு அபாயகரமான நிகழ்வாகும்.

கூற்று 2: உயிர் மற்றும் உடைமைகளுக்கு பெரும் அழிவை விளைவிப்பதுடன் மற்றவர்களின் உதவியை நாட வேண்டியுள்ளது.

1. கூற்று 1 மற்றும் கூற்று 2 சரி
2. கூற்று 1 மற்றும் கூற்று2 தவறு।
3. கூற்று 1 சரி கூற்று 2 தவறு
4. கூற்று 1 தவறு கூற்று 2 சரி

50. உயிரியல் சார்ந்த இடர்களுக்கு எடுத்துக்காட்டு ______.

1. காடழிப்பு
2. லாவா வழிதல்
3. சின்னம்மை
4. தீவிபத்து

51. கீழ்க்கண்டவற்றுள் வானிலையியல் காரணிகளாக அல்லாதது எது?

1. காடழிப்பு
2. கனமழை
3. அயன மண்டலச் சூறாவளிகள்
4. மேகவெடிப்பு

52. வெப்ப மண்டலச் சூறாவளிகள் காரணமாக திடீரென்று ஏற்படும் கடல் நீர் எழுச்சியை ______ என்கிறோம்.

1. துறைமுக அலை
2. புயல் அலை
3. சுனாமி
4. கன மழை

53. செர்னோபில் அணுப் பேரழிவு இடம் எதனருகில் உள்ளது?

1. ஜெர்மன்
2. பிரிப்யாட்
3. இந்தியா
4. சீனா

54. குழைமையூட்டிகளாகிய உருக்குலைக்கும் பொருட்கள் எவ்வகையான கழிவுகள்?

1. மருத்துவ கழிவுகள்
2. வெடிப் பொருட்கள்

LIVEWORKSHEETS

3. எளிதில் தீப்பற்றக்கூடிய கழிவுகள் 4. குடிசார் அபாயகர கழிவுகள்

55. உக்ரைன் மற்றும் பெலாரஸ் ஆகிய பகுதிகளில் எத்தனை ஆண்டுகளுக்கு பிறகு விலங்குகளும் பறவைகளும் வசிக்க ஆரம்பித்தன?

1. 33 2. 35 3. 38 4. 32

56. எந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் புவியில் எப்போதும் இல்லாத அளவிற்கு அதிக எண்ணிக்கையிலான மக்கள் தொகை பெருக்கம் காணப்பட்டது?

1. 20 2. 22 3. 21 4. 19

57. 2004ஆம் ஆண்டு இந்திய பெருங்கடலில் ஏற்பட்ட சுனாமியால் இறந்த மக்களின் எண்ணிக்கை _______.

1. 2,25,000 2. 2,25,400 3. 2,23,000 4. 2,25,500

58. 2004 ஆம் ஆண்டு இந்தியப் பெருங்கடலில் ஏற்பட்ட சுனாமியால் அதிக உயிர்ப்பலியும், பெருத்த பொருட்சேதமும் ஏற்படாத நாடு எது?

1. சோமாலியா 2. இலங்கை 3. தாய்லாந்து 4. சீனா

59. வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கான மனிதக் காரணிகள் அல்லாதது எது?

1. முறையற்ற நீர்ப்பாசன முறைகள் 2. முறையற்ற வேளாண் முறைகள்

3. பரந்த நீர்ப் பிடிப்புப் பகுதிகள் 4. வண்டல் படிவுகள்

60. நீர் மாசு என்பது நீரின் எந்தெந்த பண்புகளில் ஏற்படும் மாற்றம் ஆகும்?

1. இயற்பியல் 2. வேதியியல் 3. உயிரியல் 4. அனைத்தும்

61. இந்தியாவில் அதிக வெள்ளப் பாதிப்பிற்கு உள்ளாகாத மாநிலம்?

1. ஒடிசா 2. உத்திரப் பிரதேசம்

3. ஆந்திரா 4. தமிழ்நாடு

62. புயல் அலைகளால் பாதிப்பிற்கு உள்ளாகும் மேற்குக் கடற்கரை மாநிலம் எது?

1. ஒடிசா 2. உத்திரப் பிரதேசம்

LIVEWORKSHEETS

3. தமிழ்நாடு 4. மகாராஷ்டிரா

63. நில அதிர்வு மண்டலம் 3-ல் இடம்பெறாத இந்திய மாநிலம் எது?

1. இமாச்சலப் பிரதேசம் 2. கேரளா

3. கர்நாடகா 4. தமிழ்நாடு

64. பொருத்துக :

i. செர்னோபில் - a. தாய்லாந்து

ii. சுனாமி - b. ஜப்பான்

iii. வெள்ளப் பெருக்கு - c. சோவியத் யூனியன்

iv. ஹிரோஷிமா - d. உத்தரகாண்ட்

1. i - c ii - b iii - a iv - d 2. i - c ii - a iii - b iv - d

3. i - c ii - a iii - d iv - b 4. i - d iii - c iii - a iv - b

65. உலகில் இதுவரை நிகழ்ந்த நில நடுக்கத்தில் மிக மோசமான நில நடுக்கத்தின்போது பதிவான ரிக்டர் அளவு ______.

1. 9.5 2. 9.1 3. 10.1 4. 7.8

66. நிலநடுக்கத்தின்போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்த தவறான கூற்றுக்களைத் தேர்ந்தெடுக்கவும். (NMMS 2019-20)

a) மின் கம்பங்கள், மரம், கட்டடங்களிலிருந்து விலகி இருக்கவும்

b) தீ விபத்தைத் தவிர்க்க எரிவாயு அடுப்பு, மெழுகுவர்த்திகள் மற்றும் விளக்குகளை அணைக்க வேண்டும்.

c) படிக்கட்டுகளுக்குப் பதிலாக மின் தூக்கியைப் பயன்படுத்த வேண்டும்.

d) மேம்பாலங்கள் மற்றும் சுரங்கப் பாதைகளில் தஞ்சம் அடைய வேண்டும்

(1) a, b மற்றும் c (2) b, c மற்றும் d

(3) a மற்றும் b (4) c மற்றும் d

LIVEWORKSHEETS